අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

## பரதநாட்டியம்

### வினாத்தாள்



முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு** | 45 | T | I, II |

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**பரதநாட்டியம்** — நேரம் : 3 மணித்தியாலம்

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## பரதநாட்டியம்

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

## பகுதி – I

1. நமஸ்காரததின் போது வணக்கம் செலுத்தும் கடவுள்

   1. கணபதி  2. சிவன்  3. இலக்குமி  4. பூமாதேவி

2. உருப்படிகளை மெருகூட்டுவதற்காக செய்யப்படும் அடவு.

   1. மெய்யடவு  2. குத்தடவு  3. மகுட அடவு  4. நாட்டடவு

3. பாட்டு ஜதி ஆகியன தாளம் ஆரம்பிப்பற்கு முன்பாக ஆரமபித்தல்.

   1. சம எடுப்பு  2. அதீத எடுப்பு  3. ஆனாகத எடுப்பு  4.விஷமஎடுப்பு

4. சங்கீதத்திற்கு புரந்தரதாஸர் வழிகாட்டி, நாட்டியத்திற்கு என் மாணவர்கள் வழிகாட்டி எனக் கூறியவர்?

   1.முத்துத் தாண்டவர்  2. பாபநாசம்சிவன்
   3. ஸ்ரீமுத்துசுவாமி தீட்சிதர்  4. வேங்கடகாடுசுப்பையர்

5. “நாதமுள மத்தளம் தாளம் சீர் குழல் கானம்” என்ற சுலோகத்தினை எடுத்துக் கூறும் நூல்.

   1. திருக்குறள்  2.மகாபரதசூடாமணி
   3. சீவக சிந்தாமணி  4. சிலப்பதிகாரம்

6. கடல் அலைகளளின் செயல்நிலைகளை செய்து காட்ட பிரயோகிக்கும் முத்திரை.

   1.பதாகம்  2. திரிபதாகம்
   3. அர்த்தசந்திரன்  4. அர்த்த பதாகம்

7. ஒரு பெண் நீர் எடுக்க செல்வதை இயல்பான ஆடை ஆபரணங்கள் அரங்கப் பொருள்களுடன் அபிநயித்துக் காட்டுவது.

   1. நாட்டிய லட்சணம்  2. நாட்டியதர்மி
   3. நாட்டிய கிரமம்  4. லோகதர்மி

8. கண்களை மேலே பார்க்கும் செயல்முறையை கொண்ட திருஷ்டி பேதம்.

1. நிமீலிதம் 2. அவலோகிதம்

3. பிரலோகிதம் 4. உல்லோகிதம்

9. ஆண்கள் சாரம் அணிந்தும் பெண்கள் சாதாரண சேவை உடுத்தியும் ஆண்கள தலையயில் ஓலை பெட்டி அணிந்தும் “ஏலேலோ….” என்ற சந்தத்திற்கு ஆடும் நடனம்.

1. மீனவ நடனம் 2. கொழுந்து நடனம்

3. குறவன் குறத்தி நடனம் 4. வாள் நடனம்

10. தெய் தெய் தாம் அடவு அமைந்த தாளம்.

1.ரூபகம் 2. ஆதி 3. ஜம்பை 4. மட்டிய

11. அலாரிப்பு செய்யும் போது முழுமண்டியில் இருந்து ஆடப்படும் அடவு.

1. நாட்டடவு 2. தாஹத்த ஜெம்தரி தா

3. மண்டியடவு 4. தத் தெய் தாஹா

12. சங்க இலக்கியங்களில் பெண்களால் ஆடப்படும் நடனம் குறிப்பது.

1. குரவை 2. வெறியாடல்

3. நடனகூத்து 4. துணங்கை

13. சிருங்கார ரஸம் உச்ச நிலையில் காணப்படும் நாட்டிய உருப்படி.

1. அஷ்டபதி 2. கீர்த்தனம் 3. ஜாவளி 4. தில்லானா

14. முருகன் கடலிடை எதிர்த்த சூரணை வென்று உடுக்கு அடித்தவாறு ஆடிய கூத்து.

1. அல்லியம் 2.துடிக்கூத்து 3. மற்கூத்து 4. குடைக்கூத்து

15. “உதர தீம் தன திரனா தீம் தத் தீம் தீம்” போன்ற சொற்கள் அமைந்த உருப்படி.

1. தில்லானா 2. அலாரிப்பு

3. ஜதீஸ்வரம் 4. வர்ணம்

16. நடனத்திற்கான பாடல்கள் வீரச் சுவை நிறைந்தும் போருக்கு அறை கூறுவதாகவும், ஹார்மோனியம் சங்கு என்பவற்றை வாசிக்கும் கிராமிய நடனம்.

1. காவடி நடனம் 2. வேடுவ நடனம்

3. மீனவ நடனம் 4. வாள் நடனம்

17. பெரும்பாலும் சப்தங்கள் அமைந்த இராகம்.

1. நாட்டை 2. இராகமாளிகை 3. ஆரபி 4. வசந்தா

18. அம்பினால் தாக்குண்டவர்களின் ஆசை உடனே நிறைவேறா விட்டால் மரணம், மரண மூர்ச்சை உண்டாகும்.

1. தாமரை 2. முல்லை 3. நீலோற்பலம் 4. அசோகம்

19. கள், கஞ்சா போன்ற போதவஸ்துக்கள் உட்கொள்ளாதவர்களும். சோம்பேறி, மந்த புத்தி அசட்டுத் தைரியம் ஆகியன இல்லாதவர்களும் பரதம் கற்க தகுதியானவர். எனக் கூறும் இலட்சணம்

1. குரு இலட்சணம் 2. பாத்திர இலட்சணம்

3. கிண்கிணி இலட்சணம் 4. சிஷ்ய இலட்சணம்

20. தேவர்கள் கிருஷ்ணன் இந்திரன் போன்றோர்களுக்கு கதகளியில் போடப்படும் வேஷம்.

1. பச்சை 2. தாடி 3. கத்தி 4. டெப்பு

21. ஹாஸ்ய ரஸத்தினை எடுத்துக்கொள்ளும் நிறம்.

1.நீலம் 2. வெள்ளை 3. சிவப்பு 4. கருமை

22. தோலின் மையப் பகுதியில் நல்ல நாத வெளிப்பாட்டிற்காக ரவை தண்ணீருடன் கலந்து பிசைந்து பூசி வாசிக்கும் தாள வாத்தியம்.

1. தவில் 2. றபான் 3. மிருதங்கம் 4. உடுக்கு

**23.** பல்லவர் காலத்தில் நந்திக் கலம்பம் என்ற நூலில் குறிப்பிட்ட மன்னன்.

1. இராஜசிம்மன்
2. இராஜஇராஜசோழன்
3. மகேந்திர வர்மன்
4. நந்தி வர்மன்

**24.** பாரம் குறைந்த பூ முடி, வாள், காதல் சுவை என்பவற்றை பயன்படுத்தும் கூத்து.

1. தென்மோடி
2. வடபாங்கு
3. வடமோடி
4. வாசாப்புக் கூத்து

**25.** பரதநாட்டியத்தின் சாஸ்திரியமாக அணியப்படும் ஆடை

1. பாவாடை தாவணி
2. வேட்டி சர்வாணி
3. பஞ்சகச்சசம்
4. சேலை தாவணி

**26.** வலது கை மிருகசீர்ஷம், இடது கை மிருகசீர்ஷம் எடுத்துக் கொள்ளும் தசாவதார ஹஸ்தம்.

1. பரசுராம அவதாரம்
2. கிருஷ்ண அவதாரம்
3. வாமன அவதாரம்
4. மக்ஸய அவதாரம்

**27.** வணக்கம் செலுத்துதல், பணிந்து வணங்குதல், ஆராதணை செய்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தும் பாவம்.

1. பக்தி பாவம
2. சிஷ்ய பாவம்
3. வாத்ஸல்ய பாவம்
4. மதுர பாவம்

**28.** தெய்வீக ஆடற்கலை எனும் நூலை எழுதிய வாக்கேயகாரர்.

1. மீனாட்சி சுந்தரம்பிள்ளை
2. தஞ்சை நால்வர்
3. க.பொன்னையாப்பிள்ளை
4. வழுவூர் இராமையாபிள்ளை

**29.** இந்திய சங்கீதத்திற்கு அணிகலனாக விளங்குவதுடன், இந்தியாவின் தேசிய வாத்தியமாக விளங்கும் வாத்தியம்.

1. வயலின்
2. வீணை
3. தம்புரா
4. கிற்றார்

**30.** தித் தெயந்த தா தெய் அடவில் பாவிக்கும் பாதபேதம்.

1. உத்பிளவனம்
2. ப்ரமரீ
3. பாதசாரிகா
4. சமம்.

**31.** "மர்மோக்கியாம்" என்பதன் பொருளை உணர்த்துவது.

1. கடுங்கோபம்
2. புயல்காற்று
3. பழையநினைவு
4. முணுமுணுத்தல

**32.** சபா லட்சணம் சுலோகத்தில் சாஸ்திரங்களை ஒப்பிடுவது.

1. இலைகளுக்கு
2. கற்பகவிருட்சத்திற்கு
3. மலர்களுக்கு
4. வண்டுகளுக்கு

**33.** கண்ட நடையின் சொற்கட்டு.

1. தகதிமி
2. தக தகிட
3. தகிட தகதிமி
4. தகதிமி தகிட

**34.** $/_3 0 /_3$ எனும் அடையாளத்தினை எடுத்துக் கொள்ளும் தாளம்.

1. சதுஸ்ரஜாதி திரிபுடை தாளம்
2. சதுஸ்ர ஜாதி மட்டிய தாளம்
3. திஸ்ர ஜாதி மட்டிய தாளம்
4. திஸ்ர ஜாதி ஜம்பை தாளம்

35. A- திருக்குற்றாலம், சிற்சபை, காத்தல், காளியோடு ஆடியது.

B -சிதம்பரம், கனகசபை, ஐந்தொழில், பஞ்சகிருத்திய தாண்டவம்

C - மதுரை, சிற்சபை, காத்தல், காளியோடு ஆடியது.

D - திருநெல்வேலி, தாமிரசபை, படைத்தல், ரிஷிகளின் கர்வத்தை அழித்தல்

E - சுடுகாடு, தாமிரசபை, அருளல், மயானத்தில் ஆடியது.

இவற்றுள் தாண்டவம் தொடர்பான சரியான கூற்றுக்களை மாத்திரம் கொண்ட தெரிவு.

1. A ,B, D
2. A ,C, D
3. B ,C, D
4. B, E, D

*36 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றினிற்கும் தரப்பட்ட படத்தினை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விடையை தெரிவு செய்க.*

*36. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள துளை வாத்தியம்.*



1. நாதஸ்வரம்
2. கிளாரிநெட்
3. புல்லாங்குழல்
4. தம்புரா

*37. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தஸாவதார ஹஸ்தம்.*



1. வாமணஅவதாரம்
2. கிருஷ்ண அவதாரம்
3. கூர்மஅவதாரம்
4. கல்கி அவதாரம்.

*38. இப் படத்தில் கட்டப்பட்டுள்ள ஸம்யுத ஹஸ்தம்.*



1. அஞ்சலி
2. கபோதம்
3. கடகாவர்த்தனம்
4. கற்கடகம்

*39. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள சாஸ்திரிய நடனம்.*



1. மோகினி
2. குச்சுப்புடி
3. கதகளி
4. கதக்

*40. இப்படத்தில் காட்டப்பட்டுள்ள இரஸம்.*



1. வீரம்
2. ரௌத்திரம்
3. ஹாஸ்யம்
4. சிருங்காரம்.

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

**கல்வி அமைச்சு** | 45 | T | I, II |

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**பரதநாட்டியம் II** — நேரம் : 3 மணித்தியாலம்

## பரதநாட்டியம் II

**அறிவுறுத்தல்கள்**

- முதலாம் வினாவையும் ஏனைய நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

   i. தளாங்கு தொம் எனும் சொற்கட்டினை உடைய பாதபேதம்?

   ii. நடனத்திற்கு பயன்படும் வர்ணம் யாது?

   iii. தென்னிந்திய பிரதேசத்திற்குரிய சாஸ்திரிய நடனம்?

   iv. கிண்கிணியின் அதி தெய்வம் யாது?

   v. உறவு முறையைக் குறிக்கும் ஹஸ்தம் எது?

   vi. நாட்டிய உருப்படிகளில் முதன் முதலில் அபிநயம் வெளிப்படுத்தும் உருப்படி?

   vii. "ஷிபிகயோ" என்பதைக் காட்ட பிரயோகிக்கும் முத்திரை?

   viii. நடனத்தில் பிரயோகிக்கும் கைகளை தமிழில் எவ்வாறு அழைப்பார்கள்?

   ix. தாளத்தின் இரு ஓசைகள் எவை?

   x. கண்டிகைகளாக வகுக்கப்பட்ட உருப்படிகள் 2 தருக? (12 புள்ளி)

02. i. நீர் கற்ற ஜதீஸ்வரத்தின் இராகம், தாளம் ஆகியவற்றை குறிப்பிடுக? (2 புள்ளி)
    ii. மேலே குறிப்பிட்ட ஜதீஸ்வரத்தின் இலட்சணம் விபரிக்குக? (3 புள்ளி)

    iii. மேலே குறிப்பிட்ட ஜதீஸ்வரதின் முதலாவது கோர்வையினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக? (7 புள்ளி)

03. பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களை கருத்துடன் எழுதுக.

    **1.** அவஹித்தம் **2.** புஸ்பபுடகம் **3.** தாமரசூடம் **4.** சுகதுண்டம்

04. வடமோடி, தென்மோடி நாட்டுக் கூத்தின் வேறுபாடுகளை அட்டவனைப்படுத்துக.

**05.** சிறு குறிப்பு எழுதுக.

**1.** மீனவ நடனம் **2.** சபாநாயகன் **3.** அஸ்டபதி (3x4=12 புள்ளி)

**06. 1.** கி.பி 1 ம் நூற்றாண்டு தொடக்கம் 3 ம் நூற்றாண்டை உள்ளடக்கிய காலம் எது? (1 புள்ளி)

**2.** மேற்குறிப்பிடட காலத்தில் எழுந்த இலக்கியங்கள் 2 தருக? (2 புள்ளி)

**3.** இக்கால நடனக் கலை பற்றி குறிப்பிடுக? (9 புள்ளி)

**07.** வழுவூர் இராமையாப்பிள்ளை நாட்டியக் கலைக்கு ஆற்றிய தொண்டினை விளக்குக. (12 புள்ளி)

*****